# உலக எய்ட்ஸ் தின உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி: கலெக்டர் மு.அருணா தலைமையில் நடைபெற்றது

ஊட்டி, டிச.03-

நீலகிரி மாவட்டம், ஊட்டி தமிழகம் அரசு விருந்தினர் மாளிகையில், உலக எய்ட்ஸ் தினத்தை முன்னிட்டு, கையெழுத்து இயக்கம், உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சிகள் மாவட்ட கலெக்டர் மு.அருணா தலைமையில் நடைபெற்றது.

தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டு சங்கம் சார்பில், உலக எய்ட்ஸ் தினம் 2023-ஐ முன்னிட்டு, மாவட்ட கலெக்டர் விழிப்புணர்வு கையெழுத்து இயக்கத்தில் கையெழுத்திட்டு, 'சமூகங்களுடன் சேர்ந்து எச்.ஐ.வி/எய்ட்ஸ் தொற்றினை குறைக்கும் செயலை முன்னெடுப்போம்' என்கின்ற உறுதிமொழியினை வாசிக்க, அனைத்து அரசுத்துறை அலுவலர்களும் உறுதிமொழியினை ஏற்றுக்கொண்டனர். இந்நிகழ்ச்சியில், மாவட்ட கலெக்டர் பேசியதாவது:




ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் மாதம் 1-ஆம் தேதி உலக எய்ட்ஸ் தினமாக அனுசரிக்கப்படுகிறது. இந்நோயினையை குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் பல்வேறு விழிப்புணர்வு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. உலக எய்ட்ஸ் தினத்தையொட்டி, இன்று நமது மாவட்டத்தில் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகிறது. எச்.ஐ.வி ஃ எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டவர்கள் சிகிச்சை மேற்கொள்ள முன்வரவேண்டும். உடலில் ஏற்படுகிற இரத்த அழுத்தம், சர்க்கரை நோய் போன்றே எய்ட்ஸ் நோயினையும் ஒரு நோயாக கருதி சிகிச்சை மேற்கொள்ள வேண்டும் என மாவட்ட கலெக்டர் தெரிவித்தார். அதனை தொடர்ந்து மாவட்ட கலெக்டர் 16 பயனாளிகளுக்கு தற்காலிக இயலாமைக்கான உதவித்தொகை மாதந்தோறும் பெறுவதற்கான ஆணைகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) மற்றும் குடும்ப நலம் மாவட்ட எய்ட்ஸ் கட்டுப்பாட்டு அலுவலர் மரு.பாலுசாமி,; தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டு சங்க மாவட்ட திட்ட அலுவலர் அறிவழகன், மருத்துவர்கள், செவிலியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# கார்ப்பரேட்டுகளுக்கான ஆட்சியாக பிரதமர் மோடி அரசு உள்ளது: ஊட்டியில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு




ஊட்டி, டிச.03 -

கார்ப்பரேட்டுகளுக்கான ஆட்சியாக பிரதமர் மோடி அரசு உள்ளது என அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கூறினார்.

நீலகிரி மாவட்டம் ஊட்டி என்சிஎம்எஸ் மைதானத்தில் திமுக இளைஞர் அணி செயல்வீரர்கள் கூட்டம் நேற்று நடைபெற்றது. மாவட்ட செயலாளர் பா.மு. முபாரக், தேர்தல் பணி செயலாளரும், சுற்றுலாத்துறை அமைச்சருமான கா.ராமச்சந்திரன், நீலகிரி எம்பி ஆ.ராசா ஆகியோர் முன்னிலை வகித்தனர். இக்கூட்டத்தில் கழக இளைஞர் அணி செயலாளரும், அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பேசியதாவது:

இந்தியாவிலேயே கட்சியின் மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கிய ஒரே கட்சி தி.மு.க. தான். தி.மு.க.வில் எத்தனை அணிகள் இருந்தாலும் முதன்மையான அணி இளைஞரணி தான். நாட்டிலேயே இளைஞரணி என்பது முதன் முதலில் தி.மு.க.வில் தான் தொடங்கப்பட்டது. பா.ஜ.க.வினருக்கு எங்கு சென்றாலும் என் ஞாபகம் தான். என்னை பற்றியே பேசி கொண்டிருக்கின்றனர். நான் ஒரு அரங்கத்தில் பேசினேன். அதில் பிறப்பால் அனைவரும் சமம் என்று மட்டுமே பேசினேன். ஆனால் நான் பேசாததை பேசியதாக திரித்து கூறி வருகின்றனர். எங்கு போனாலும் தி.மு.க.வை பற்றி பேசுவதே அமித்ஷாவுக்கு வேலையாக உள்ளது. பொய் குற்றச்சாட்டுகளை சொல்வதில் அமித்ஷா வல்லவர். அதுபோல பிரதமரும் இதையே பேசி வருகின்றனர். ஒட்டுமொத்த தமிழ்நாடும் கலைஞரின் குடும்பம் தான். தன்னலம் பார்க்காமல் சுயநலம் பார்க்காமல் செயல்படுபவர்கள் தி.மு.க.வினர் தான். தி.மு.க ஆட்சி அமைத்ததும் தமிழ்நாட்டில் பெண்களுக்கு பல்வேறு புதிய திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. தி.மு.க. அளித்த அனைத்து தேர்தல் வாக்குறுதிகளும் நிறைவேற்றப்பட்டுள்ளன. பள்ளி மாணவர்களின் பசியை போக்கிய ஆட்சி தான் தி.மு.க. மாணவ சமுதாயத்தினருக்கு பல்வேறு நலத்திட்டங்களை நடைமுறைப்படுத்தியுள்ளோம். தமிழ்நாட்டு குழந்தைகளின் பாதுகாவலராக தி.மு.க அரசு உள்ளது. மத்திய அரசு 9 வருடங்களில் செய்த ஊழல்களை சி.ஏ.ஜி. அறிக்கையில் அம்பலமாகிவிட்டது. மத்திய அரசால் பலன் அடைந்தது என்று பார்த்தால் அது அதானி குடும்பம் மட்டுமே. கார்ப்பரேட்டுகளுக்கான ஆட்சியாக பிரதமர் மோடி தலைமையிலான அரசு உள்ளது. 2021 சட்டமன்ற தேர்தல் போன்று, 2024 பாராளுமன்ற தேர்தலில் இந்தியா கூட்டணியை வெற்றி பெற வைக்க வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

கூட்டத்தில் மாவட்ட அவை தலைவர் போஜன், மாவட்ட துணை செயலாளர்கள் ரவிகுமார், லட்சுமி, மாவட்ட பொருளாளர் நாசர் அலி, மாநில சிறுபான்மை பிரிவு துணை செயலாளர் அன்வர்கான், மாநில விளையாட்டு மேம்பாட்டு அணி துணை செயலாளர் வாசிம்ராஜா, நகர செயலாளர் ராமசாமி, ஜார்ஜ், இளஞ்செழியன், சேகரன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் சசிகுமார், துணை அமைப்பாளர் நாகராஜ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

பின்னர் அவர் செய்தியாளர்களிடம் உதயநிதி ஸ்டாலின் கூறியதாவது: மருத்துவரிடம் அமலாக்கத்துறை அதிகாரி லஞ்சம் பெற்றதாக தமிழ்நாடு லஞ்சம் ஒழிப்புத் துறை போலீசார் கைது செய்துள்ளது குறித்து செய்தியாளர் கேள்விக்கு பதிலளித்த விளையாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தெளிவான அறிக்கை இருப்பதால் அரசு சட்டப்படியான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது. என்றார்.



நீலகிரி மாவட்டத்திற்கு வருகை தந்த இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலினை நீலகிரி கலெக்டர் மு.அருணா தமிழகம் விருந்தினர் மாளிகையில் மலர்கொத்து வழங்கி வரவேற்றார்.

## ஈரோடு மாவட்டத்தில்

# கருணாநிதி நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு நடைபெற்ற முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்ட சிறப்பு பதிவு சேர்க்கை முகாம்

## கலெக்டர் ராஜ கோபால் சுன்கரா நேரில் ஆய்வு

ஈரோடு.டிச.03-

முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, ஈரோடு திருநகர் காலனி மாநகராட்சி நடுநிலைப் பள்ளியில் நடைபெற்ற முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்ட சிறப்பு பதிவு சேர்க்கை முகாமினை கலெக்டர் ராஜ கோபால் சுன்கரா நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.



ஈரோடு திருநகர் காலனி, மாநகராட்சி நடுநிலைப் பள்ளியில் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, நடைபெற்ற முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்ட சிறப்பு பதிவு சேர்க்கை முகாமினை கலெக்டர் ராஜ கோபால் சுன்கரா நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு தெரிவிக்கையில்,

தமிழ்நாடு முழுவதும் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகின்றது. அதன் ஒரு பகுதியாக மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார்பில் முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்டத்தின் கீழ் தமிழகம் முழுவதும் சுமார் 100 இடங்களில் சிறப்பு பதிவு சேர்க்கை முகாம்கள் நடைபெற்று வருகின்றன. அதன்படி ஈரோடு மாவட்டத்தில் முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்ட சிறப்பு பதிவு சேர்க்கை முகாம்கள் ஈரோடு மாநகராட்சி உட்பட்ட திருநகர் காலனி மாநகராட்சி நடுநிலைப்பள்ளி, சென்னிமலை கொமரப்பா செங்குந்தர் பெண்கள் மேல்நிலைப் பள்ளி மற்றும் நம்பியூர் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி ஆகிய இடங்களில் நடைபெற்றது. இம்முகாமில் இதுவரை முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்டத்தில் பதிவு செய்யாத பயனாளிகள் கலந்து கொண்டு, தங்களது குடும்ப அட்டை மற்றும் ஆதார் அட்டையுடன் பதிவு செய்து வருகின்றனர். இம்முகாம்களில் பதிவு செய்ய தவறியவர்கள் ஈரோடு வட்டாட்சியர் அலுவலகத்தில் இயங்கி வரும் பதிவு மையத்தில் பதிவு செய்து கொள்ளலாம். மேலும், ஈரோடு மாவட்டத்தில் 12 அரசு மருத்துவமனைகள் மற்றும் 48 தனியார் மருத்துவமனைகளிலும் முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்டத்தின் கீழ் ரூ.5.00 இலட்சம் வரையிலான சிகிச்சைகள் பெற்றுக் கொள்ளலாம் என தெரிவித்தார். மேலும் நடைபெற்ற முகாம்களில் சுமார் 1800-க்கும் மேற்பட்டோர் பதிவு பெற்றனர். தொடர்ந்து கலெக்டர் ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட, வ.உ.சி பூங்கா விளையாட்டு அரங்கில் ரூ.7.57 கோடி மதிப்பீட்டில் செயற்கை ஓடுகளப்பாதை மற்றும் இயற்கை புல்வெளி கால்பந்து மைதானம் அமைக்கும் பணிகளையும் மற்றும் மாணவர் விடுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் புனரமைப்பு பணிகளையும் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்நிகழ்வின் போது, ஈரோடு மாவட்ட மருத்துவ காப்பீடு திட்ட ஒருங்கிணைப்பாளர் விஜயகுமார், ஈரோடு வட்டாட்சியர் ஜெயக்குமார் உட்பட தொடர்புடைய அலுவலர்கள் உடன் இருந்தனர்.

## ஊட்டியருகே

# எலும்பு கூடாக மீட்கப்பட்ட பெண்ணின் உடல்: போலீசார் விசாரணை

ஊட்டி, டிச.03-

ஊட்டி அருகே பெண் உடல் எலும்பு கூடாக மீட்கப்பட்டுள்ளது இது குறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

நீலகிரி மாவட்டம் ஊட்டி அருகேயுள்ள உலலத்தி பகுதியில் உள்ள ஒரு தனியார் தோட்டத்தின் புதர் பகுதியில் எலும்புக்கூடு ஒன்று கிடந்தது. மேலும் அதன் அருகில் துணிகள் கிழிந்த நிலையிலும் மது பாட்டில்களும் கிடந்து உள்ளது. இதைபார்த்து அதிர்ச்சி அடைந்த அந்த பகுதி பொதுமக்கள் இதுகுறித்து புதுமந்து போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர். இது குறித்த தகவலின் பெயரில்; இன்ஸ்பெக்டர் அல்லிராணி தலைமையிலான போலீசார் சம்பவ இடத்திற்கு சென்று ஆய்வு நடத்தி எலும்புக்கூட்டை மீட்டு, ஆய்வுக்காக, ஆய்வகத்திற்கு அனுப்பி வைத்துள்ளனர். அந்த எலும்புக்கூடு சுமார் 40 வயது மதிக்கத்தக்க பெண்ணின் உடல் அமைப்புடன் ஒத்து போகிறது. மேலும் வளையல்கள் உள்ளது. எனவே பெண்ணை யாராவது அழைத்து வந்து கொலை செய்து விட்டார்களா? இல்லை தவறி விழுந்து இறந்து விட்டாரா? தற்கொலை செய்து கொண்டாரா? மது போதையில் தகராறு நடந்து இருக்குமா? என்பது உள்பட பல்வேறு கோணங்களில் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இதுகுறித்து போலீஸ் தரப்பில் கூறப்படுவதாவது:- எலும்புக்கூடாக மீட்கப்பட்டவர், சுமார் ஒரு வருடத்திற்கு முன்பு இறந்திருக்கலாம். புதர் பகுதி என்பதால் வெளியூர் ஆட்கள் வர வாய்ப்பு இல்லை. எனவே உள்ளூரில் மாயமானவர்கள் யாராவது உள்ளார்களா? என்று விசாரணை நடத்தப்பட்டுள்ளது. ஆனால் இதுவரை யாரும் மாயமாகவில்லை என்று தெரிகிறது. எலும்புக்கூடு கிடந்த இடத்தில் இருந்து சில கிலோமீட்டர் தூரத்தில் சுடுகாடு உள்ளது. எனவே சுடுகாட்டில் சரியாக புதைக்காத பிணத்தை நரி அல்லது கரடி இழுத்து வந்து இங்கு போட்டு இருக்கலாம்.

உடலில் தசை பகுதி எதுவும் இல்லாமல் வெறும் எலும்புக்கூடு மட்டும் இருப்பதால், தற்போதைய நிலையில் உறுதியாக ஒன்றும் கூற முடியாது. ஆய்வக முடிவுகள் வந்த பின்னர் தான் என்ன நடந்தது என்பது குறித்து உறுதியாக தெரியும். இவ்வாறு கூறினர்.

# நடிகை சில்க் ஸ்மிதாவின் பிறந்தநாள் கொண்டாடிய டீக்கடைக்காரர்: ஈரோட்டில் ருசிகரம்



ஈரோடு, டிச. 3:

ஈரோட்டில் கேக் வெட்டி கர்ப்பிணி பெண்களுக்கு சீர்வரிசை பொருட்களை வழங்கி நடிகை சில்க் ஸ்மிதாவின் பிறந்தநாளை கொண்டாடிய டீக்கடைக்காரர்.

பிரபல நடிகர்களின் பிறந்தநாள் அரசியல் கட்சித் தலைவர்களின் பிறந்தநாளை அவர்களது ரசிகர்கள் ஆதரவாளர்களும் விமர்சையாக கொண்டாடுவது வழக்கம்.

அந்த வகையில் பிரபல கவர்ச்சி நடிகை சில்க் ஸ்மிதாவின் 64 வது பிறந்த நாளை டீக்கடைக்காரர் ஒருவர் கொண்டாடி இருக்கிறார். ஈரோடு அகில் மேடு வீதியில் பிரியா டீ ஸ்டால் டீ கடை நடத்தி வருபவர் குமார். இவர் நடிகை சில்க் ஸ்மிதாவின் தீவிர ரசிகர் ஆவார். இவர் ஒவ்வொரு ஆண்டும் நடிகை சில்க் ஸ்மிதாவின் பிறந்தநாளை கேக் வெட்டி உற்சாகமாக கொண்டாடுவது வழக்கம். அதேபோல் இந்த ஆண்டும்நேற்று சில்க் ஸ்மிதாவின் பிறந்தநாளை டீக்கடை குமார் வெகு விமர்சியாக கொண்டாடினார்.

அதில் வருடம் தோறும் கொண்டாடுவது போல் இன்றி இந்த ஆண்டு கர்ப்பிணி பெண்களை அழைத்து அவர்களுக்கு சீர்வரிசை பொருட்களை வழங்கியதோடு கேக் வெட்டியும் இனிப்புகளை பொதுமக்களுக்கு வழங்கியும் உற்சாகமாக கொண்டாடினார்.

கவர்ச்சி நடிகை என்றும் பாராமல் சில்க் ஸ்மிதாவுக்கு டீக்கடைக்காரர் பிறந்தநாள் விழா கொண்டாடிய நிகழ்வு இணையவாசிகள் மத்தியில் வைரல் ஆகி வருகிறது.

# விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் ஊட்டியில் 15-ந் தேதி நடக்கிறது

ஊட்டி, டிச.03-

நீலகிரி மாவட்டத்தில் டிசம்பர் 2023-ம் மாதத்திற்கான விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம்,; வரும் 15.12.2023 அன்று காலை 11.00 மணிக்கு உதகமண்டலம், பிங்கர் போஸ்ட் பகுதியில் உள்ள மாவட்ட கலெக்டர் கூடுதல் அலுவலக கூட்ட அரங்கில் நடைபெறவுள்ளது.

எனவே, விவசாயிகள் விவசாயம் சம்பந்தப்பட்ட கோரிக்கைகள் ஏதேனும் இருப்பின், அக்கோரிக்கைகளை 08.12.2023-க்குள் தோட்டக்கலை இணை இயக்குநர், தபால்பெட்டி எண்.72, உதகை - 643001 என்ற அலுவலக முகவரிக்கு தபாலிலோ அல்லது நேரடியாகவோ அல்லது தனாமுழவலலுடியவடைஉ டிஅ என்ற மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல் மூலமாகவோ அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மாவட்ட கலெக்டர் மற்றும் இம்மாவட்ட அனைத்து துறை அலுவலர்களும் கலந்து கொள்வதால், விவசாயிகள் விவசாயம் சம்பந்தமான குறைகள் இருப்பின், இக்கூட்டத்தில் மாவட்ட கலெக்டரிடம் தெரிவிக்கலாம் என்ற விபரம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. இவ்வாறு மாவட்ட கலெக்டர் மு.அருணா தெரிவித்துள்ளார்.

# தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் ஈரோடு மாவட்ட மாநாடு




ஈரோடு, டிச.3-

தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் ஈரோடு மாவட்ட மாநாடு ஈரோடு பழையபாளையத்தில் நேற்று நடைபெற்றது. மாநாட்டுக்கு மாவட்ட தலைவர் ஜெகநாதன் தலைமை தாங்கினார். மாவட்ட துணைத்தலைவர் குருராகவேந்திரன் மாநாட்டு கொடியை ஏற்றி வைத்தார். மாவட்ட துணைத்தலைவர் கவிதா வரவேற்று பேசினார். இதில் மாநில செயலாளர் செந்தில்குமார், பொதுச்செயலாளர் சங்கரலிங்கம், துணைத்தலைவர் குமரேசன் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாவட்ட செயல் தலைவர் ச.விஜய மனோகரன்ஆகியோர் கலந்துகொண்டு பேசினர். இந்த மாநாட்டில் வருவாய்த்துறையில் பணியாற்றும் அலுவலக உதவியாளர் முதல் மாவட்ட வருவாய் அலுவலர் வரை அனைவருக்கும் மேம்படுத்தப்பட்ட தனி ஊதியம் வழங்க வேண்டும். மக்கள் தொகைக்கு ஏற்ப அனைத்து ஆர்.டி.ஓ, தாலுகா அலுவலகங்களில் பணி கடினத்துக்கு ஏற்ப புதிய பணிஇடங்களை உருவாக்க வேண்டும். வருவாய்த்துறை அலுவலகங்களில் காலியாக உள்ள 10 ஆயிரத்து 488 காலிப்பணி இடங்களை உடனடியாக நிரப்ப வேண்டும். பழைய ஓய்வூதிய திட்டத்தை அமல்படுத்த வேண்டும் என்பன உள்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மாநாட்டில் மாவட்ட செயலாளர் ரமேஷ், பொருளாளர் விஜய், துணைத்தலைவர் ஜதீந்குமார் உள்பட பலர் கலந்துகொண்டனர் முடிவில் மாவட்ட இணைச்செயலாளர் எஸ். கதிர்வேல் நன்றி கூறினார்

# ஈரோடு நந்தா கல்வி நிறுவனங்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளின் கூட்டமைப்பு சார்பில் உலக மாற்றுத்திறனாளிகள் தின கொண்டாட்டம்



ஈரோடு டிச.03-

ஈரோடு நந்தா கல்வி நிறுவனங்களும் தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகளின் வாழ்வுரிமை நலச்சங்கங்களின் கூட்டமைப்பும் இணைந்து உலக மாற்றுத்திறனாளிகள் தினத்தினை முன்னிட்டு "சாலை பாதுகாப்பு" பற்றிய விழிப்புணர்வினை ஏற்படுத்தும் வகையில் மாபெரும் பேரணி நடைபெற்றது.

ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் தலைவர் வி.சண்முகன் தலைமையேற்று பேரணியை துவக்கி வைத்தார். இப்பேரணியானது பெருந்துறை சாலையிலுள்ள காலிங்கராயன் இல்லத்திலிருந்து புறப்பட்டு வ.உ.சிதம்பரம் மைதானம் வரை சென்று முடிந்தது.

முன்னதாக தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகளின் வாழ்வுரிமை நலச்சங்க கூட்டமைப்பின் மாநில தலைவர் ஆ.ராஜரத்தினம் பேரணியில் கலந்து கொண்ட மாற்று திறனாளிகள் உட்பட அனைவரையும் வரவேற்று பேசினார்.

மேலும் இப்பேரணியில் உயரிருந்த ஆர்.கே.கார்த்திக் சிறப்பு விருந்தினராக கலந்துக் கொண்டு தனது வாழ்த்துக்களை தெரிவித்தார். ஈரோடு மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் கோதை செல்வி முன்னிலை வகித்தார்.

இப்பேரணியில் தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகளின் வாழ்வுரிமை நலச்சங்க கூட்டமைப்பின் அங்கத்தினர்கள் ஒருங்கிணைந்து சிறப்பாக நிறைவு செய்திருந்தார்கள். இவர்களுடன் சேலம், கரூர் மற்றும் திருப்பூர் மாவட்டத்தினை சார்ந்த மாற்றுத்திறனாளிகளின் வாழ்வுரிமை நலச்சங்கத்தின் தலைவர்களும், நிர்வாகிகளும் கலந்துக் கொண்டு சிறப்பாக நிறைவு செய்திருந்தார்கள். பேரணியின் முடிவில் தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகளின் வாழ்வுரிமை நலச்சங்க கூட்டமைப்பின் மாநில பொருளாளர் தகுமார் நன்றிகூறினார்.

பேரணியினை ஏற்பாடு செய்திருந்த தலைவர்கள் மற்றும் ஒருங்கிணைப்பாளர்களை ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் செயலர் எஸ். நந்தகுமார் பிரதீப், நந்தா கல்வி நிறுவனங்களின் செயலர் எஸ் திருமூர்த்தி மற்றும் முதன்மை நிர்வாக அதிகாரி முனைவர் எஸ். ஆறுமுகம் ஆகியோர் தங்களது பாராட்டுக்களை தெரிவித்தார்கள்

